கலைக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகள் அருகிலே இருக்கின்ற இன்னொரு வங்கியோடு சிலயிடங்களிலே இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கலைக்கப்பட்டும், அருகிலே இருக்கின்ற கூட்டுறவு வங்கியோடு இணைக்கப்படாமல் சில கிராமங்களில் கூட்டுறவு வங்கியே இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்திலே புதிதாகக் கூட்டுறவு வங்கி தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பொதுமக்கள் சிரமத்திற்கு ஆளாகின்ற சூழ்நிலை இருக்கின்ற இடங்களில், உடனடியாக வங்கிகள் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 153 திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

153—சங்கராபுரத்தில் வேளாண்மைக் கல்லூரி.

*4317 திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விடையளிப்பாரா :

(அ) சங்கராபுரத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சங்கராபுரம் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி விவசாயப் பெருமக்கள் அதிகம் உள்ள தொகுதி. கல்வராயன் மலைப் பகுதியும் சங்கராபுரம் தொகுதியில் உள்ளது. மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கின்ற தொகுதி. மலைவாழ் மக்கள் நலனை முன்னிட்டு அரசு மீண்டும் வேளாண்மைக் கல்லூரி அமைக்க மறுபரிசீலனை செய்யுமா என்றும், இல்லையென்றால் விவசாயப் பெருமக்கள் புதிய புதிய உத்திகளைக் கையாள Agricultural Training Centre வேளாண்மைப் பயிற்சி மையத்தை உருவாக்க முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெஞ்சுக்கு நீதியும், தோளுக்கு வாளும் நிறைந்த சுடர் மாமணியாம் எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் புதிய பயிற்சிப் பள்ளி கே உருவாவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 154 திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

154—

இராசிபுரம் நகரில் அரசுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு.

*4219 திருமதி க, பழனியம்மாள் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராசிபுரம் நகரில் அரசுப் பணியாளர்களுக்கு அரசுக் குடியிருப்பு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. டி, எம், செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை,

திருமதி க, பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரமானது மிகவும் பின்தங்கிய. வசதி ஏதும் இல்லாமல் ஒரு சிறிய நகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது, அங்கே அரசுப் பணியாளர்கள் வாடகைக்கு வீடு கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அங்கு ஒரு குடியிருப்பு கட்டித் தர, வருகிற ஆண்டிலேயே அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம், செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணைப்படி. அரசு அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென்று சொன்னால், அது மாவட்டத் தலைமையிடமாகவோ அல்லது வருவாய்க் கோட்டத் தலைமையிடமாகவோ இருக்கவேண்டும், அந்த அடிப்படையிலே, மாவட்ட ஆட்சியாளருடைய பரிந்துரை இருக்குமாயின். அங்கு அரசுக்குப் போதிய நிலம் இருக்குமாயின், குடியிருப்புகளுக்குத் தேவையான அரசு அலுவலர்களிடமிருந்து டிமாண்ட் கிடைக்கப்படுமாயின் அரசு ஆவன செய்யும் என்று அறிவிக்கின்றேன்.